[2002 மே 8

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், இந்தத் திட்டப் பணிக்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறதோ, அந்த நிதியைப் பெற்று, இந்தச் சாலையை அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 306, திரு. க. பாரமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

306—

அணைக்கட்டு

***6050—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டம், கிருதுமால் நதியின் குறுக்கே, கீழராங்கியன்-பூம்பீடாகை சாலையின் அருகில், ஓடாத்தூர் அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓடாத்தூர் அணைக்கட்டுத் திட்டம் குறித்து தலைமைப் பொறியாளர் (திட்டம்) ஆய்வு செய்து வருகிறார்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வு பல வருடங்களாக தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. அதை விரைவுபடுத்திச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில்—அத்திக்குளம் என்று ஓர் அணைக்கட்டு 3.47 கோடி ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். கிருதுமால் நதியில் 3 கோட்டங்கள், வைப்பாறு வடிநிலக் கோட்டம், குண்டாறு வடிநிலக் கோட்டம்,

2002 மே 8]

சிவகங்கை வடிநிலக் கோட்டம் என்று மூன்று பகுதிகள் இருக்கின்றன. இத்திட்டம் கடைசியிலே வைப்பாறு வடிநிலக் கோட்டத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு வடிநிலக் கோட்டப் பகுதிகளில் வருகிற கிருதுமால் ஆறு முழுமையாகச் சீரமைக்கப்படவில்லை. பல இடங்களிலே ஆறே இல்லாமல் இருக்கிறது. அந்த இரண்டையும் சீர்த்திருத்தம் செய்தாலொழிய, இவ்வளவு பணம் செலவழித்து கட்டப்பட்டு முடிக்கப்பட்டிருக்கிற அத்திக்குளம் அணை பயன்படுத்தப்படாமல் போய்விடும். ஆகவே, அந்த வேலையைச் செய்யவேண்டுமென்றும் அதற்குத் தகுந்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, கிருதுமால் நதியிலே, ஓடாத்தூர் அணையைக் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டம், கிருதுமால் நதியின் குறுக்கே கீழராங்கியன் — பூம்பீடாகை சாலையின் அருகில் ஓடாத்தூர் அணைக்கட்டு கட்டும் திட்டத்திற்கு 2000-2001 விலை விகிதப்படி ரூ.90.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அது திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளர் மட்டத்தில் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினைச் செயலாக்குவதன் மூலம் 1,258.40 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறுவதோடு, 607.80 ஏக்கர் தரிசு நிலம் பாசன நிலமாக மாறும் வாய்ப்புள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க நில எடுப்பு செய்ய வேண்டிய தேவையில்லை. இத்திட்டத்தின் மூலம் 1,857.64 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும். மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவைப் பெறுவதற்கு நடவடிக்கையும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒத்திசைவு கிடைத்தவுடன் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குண்டான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த அறிவிப்பிலேயே 2000-2001-லே, ரூ.90.00 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். 2001-2002 முடிந்துவிட்டது. 2002-2003-ல் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இந்த வருடத்திலாவது அதை முடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 மே 8

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 விலை விகிதப்படிதான் ரூ.90.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இந்த வருடம், 2002-2003 விலை விகிதப்படி திட்ட மதிப்பீடு தயார் செய்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 307, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

307—

மகளிர் கலைக் கல்லூரி

***1561—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தத்தில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய அரசின் நிதி நிலைமையின் காரணமாக, புதிய அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லையென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, குடியாத்தத்தில் மகளிர் கலைக் கல்லூரி தொடங்கும் உத்தேசம் இந்த ஆண்டில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சி.எம். சூரியகலா: அடுப்பு ஊதும் பெண்களுக்கு கல்வி எதற்கு என்றிருந்த நாட்டில், பெண்கள் ஆள வந்தால் நாட்டினிலே சாக்காடு இல்லை, போர் இல்லை என்ற பாரதிதாசன் வரிகளை உண்மையாக்கி, ஆளவும் தெரியும் அரசியலில் அயோக்கியர்களை அடக்கவும் தெரியும் என்று நிரூபித்த தாய்க்குலத்தின் விடிவெள்ளி, போயஸ் கார்டன் தந்த பொது அறிவுப் பெட்டகம் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பயில்கின்ற பல்கலைக்கழகம் அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

முற்பகல் 10-10